# தினமணி கட்டுரையாளர் பார்வைக்கு ஒரு கடிதம்!

அன்புள்ள தினமணி கட்டுரையாளர்க்கு அநேக 'நமஸ்காரம்!'

தாங்கள் 09.07.2024 தேதியிட்ட தினமணி நாளேட்டில் எழுதிய 'சிறிதாக வளைவும் இல்லாதது செங்கோல்' எனும் கட்டுரையை 'வாசித்தோம்'. தங்களின் ஞானமளந்த மேன்மையினைப் பெரிதும் 'சிலாகித்தோம்'. 'அபாரம்' போங்கள். உமது கருத்தைக் கூறிவிட்டீர்கள். எமது கருத்தையும் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்காகவே இந்தக் கடிதம். நீங்கள் இக்கட்டுரையை எழுதுவதற்கு காரணம் என்ன?

நாடாளுமன்றத்தின் மக்களவையில் வைக்கப் பட்டுள்ள செங்கோலை அகற்ற வேண்டும்; அந்த இடத்தில் அரசியல் சட்டப் புத்தகத்தை வைக்க வேண்டும் எனும் கோரிக்கையை அகிலேஷ் யாதவ் எழுப்பிய போது தி.மு.க. அதனை ஆதரித்தது. இது குறித்து டி.கே.எஸ்.இளங்கோவன் தனது கருத்தை நாளேடுகளில் எடுத்துக் கூறியிருந்தார். அவர் தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளர். தயாநிதி மாறன் எம்.பி.யும் தனது எதிர்ப்பைப் பதிவு செய்து இருந்தார். இதற்குத் தான் நீங்கள் ஒரு கட்டுரையை வரைந்து தள்ளி விட்டீர்கள். நாமும் முரசொலியில் ஒரு கட்டுரையை எழுதி இருந்தோம். நீங்கள் அந்தக் கட்டுரையை வாசித்ததாகத் தெரியவில்லை. அந்தக் கட்டுரையில் எமது கருத்தாக செங்கோல் மக்களாட்சியின் அடையாளம்; அதை ஜனநாயகம் செயல்படும் காலத்தில் பயன்படுத்துவது மன்னராட்சியின் மனோபாவம் என்று குறிப்பிட்டிருந்தோம். இதை வைத்துதான் தி.மு.க. செங்கோல் கருத்தினை எதிர்க்கிறது.

ஆனால் ஜூலை 9 ஆம் தேதி தினமணி நாளேட்டில் நீங்கள் எழுதிய கட்டுரையில் தொல்காப்பிய மரபியலில் 'தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய' எனும் சூத்திரத்தையும் பாண்டிய மன்னனின் கூற்றையும் திருக்குறளின் செங்கோன்மை பற்றிய அதிகாரத்தையும் எடுத்துக் காட்டி செங்கோலின் இன்றைய தேவையை வலியுறுத்தி இருக்கிறீர்கள். அதோடு தங்களது கட்டுரையில் மோடியை மிக அழகாக உங்களுக்கே இருக்கிற 'சமத்தோடு' சாமர்த்தியமாகச் செங்கோலை அவர் பயன்படுத்திய விதத்தை சொல்லி இருக்கிறீர்கள். மேலும் கலைஞர் பற்றியும் தி.மு.க.வினரின் 'அறியாமையை' குறித்தும் மிகவும் கவலைப்பட்டு எடுத்துக் கூறியிருக்கிறீர்கள், இந்த இரண்டு செய்திகளை – நீங்கள் எழுதியவைகளை கீழே மீண்டும் குறிப்பிட்டு விட்டு எம் பதிலைத் தெரிவிக்க இருக்கின்றோம்.

(1) "பாரதப் பிரதமர் நாடாளுமன்றத்தில் தமிழில் செங்கோல் எனப்படும் அரசநீதியின் அடையாளமாகக் கருதப்படும் கோலை நிறுவினார். இதனை ஆங்கிலத்தில் சொல்லப்படும் 'ஸெப்டர்' என்னும் சொல்கொண்டு அவர் சொல்லவில்லை. வடமொழியில் சொல்லப்படும் 'தண்டம்' என்ற சொல் கொண்டும் அழைக்கவில்லை. தூய தமிழ்ச் சொல்லாகிய 'செங்கோல்' என்றே சொன்னார். அரசு ஆவணத்திலும் அவ்வாறே பதிவு செய்யப்பட்டுள்ளது."

(2) "தொல்காப்பியப் பூங்கா எழுதி திருக்குறளுக்கு 'கலைஞர் உரை' எனப் பெயரிட்டு உரை கண்டு தமிழிற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் சிறப்புச் செய்தவரின் உடன்பிறப்புகளில் ஒருவர், அண்ணாவின் எதிரொலி என அழைத்துக் கொண்டாடப்பட்டவரின் மகன், இவரது எதிரொலியாக இருப்பதை விட, வடவர் ஒருவரின் எதிரொலியாக இருப்பது எவ்வாறு தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் புரியவில்லை.

தொல்காப்பியமும் தெரியாமல், திருக்குறளும் தெரியாமல், செங்கோன்மைக்குக் கலைஞர் கருணாநிதி கண்ட உரையும் தெரியாமல் செங்கோல் பற்றிக் கருத்துக் கூறுவது மிகவும் வருத்தத்திற்குரியதே!

விதியே! விதியே! தமிழச் சாதியை என் செயக் கருதியிருக்கின்றாய் எனச் சொல்லி நொந்து கொள்ள வேண்டியதுதான்."

வடநாட்டு பா.ஜ.க. தலைவர்கள் திடீரென்று திருவள்ளுவர் மேல் பாசம் கொள்வார்கள், சிலை வடிப்பார்கள். கங்கை கரையோரமாக கோணி போட்டு மூடி வைப்பார்கள். ஜனநடமாட்டம் இல்லாத பகுதியில் அந்தத் திருவள்ளுவர் சிலையை நிறுவுவார்கள். அதே போல மோடி திருவள்ளுவர், திருக்குறள், தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டுவது தமிழர்களை உயர்வாய் பேசுவது எல்லாம் தமிழ்நாட்டை பா.ஜ.க. வசமாக்கிக் கொள்ளவே தவிர வேறு அல்ல, தமிழ்நாட்டில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு வழிதான் அவர்களின் தமிழ்க் காதல்! நீங்கள் ஆங்கிலத்தில் பிரதமர் செங்கோலுக்கு 'ஸெப்டர்' என்று அழைக்கவில்லை. வடமொழியில் – சமஸ்கிருதத்தில் தண்டம் என்று குறிப்பிடவில்லை. தமிழில் செங்கோல் என்றே கூறுகிறார். அரசு ஆவணத்திலும் செங்கோல் என்றே பதிவு செய்து இருக்கிறார் என்று ஆனந்தத் தாண்டவம் ஆடியிருக்கிறீர்கள்.

மோடி செங்கோல் என்று கூறுவதாலேயே தமிழ், தமிழர் மேல் பேரன்புக் கொண்டவர் ஆகி விட்டவர் ஆவாரா? உலகிலேயே பழம் பெரும் நாகரிகம் தமிழர் நாகரிகம் – பழம் பெரும் மொழி தமிழ் என்று பேசும் மோடி தமிழை இந்தியாவினுடைய ஆட்சி மொழி ஆக்கிவிடுவாரா? திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பாரா? செய்ய மாட்டார். அவர் யார் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் யார் என்பது அவருக்குத் தெரியும். உங்களைப் போன்றவர்கள் கடந்த 112 ஆண்டுகள் பேசியதைத்தான் இப்போதும் பேசுகிறீர்கள். எழுதுகிறீர்கள்.

**கலைஞர் தொல்காப்பியப் பூங்கா எழுதினார். திருக்குறளுக்கு தெளிவுரை எழுதினார். அவருக்கு வேண்டியவர் – நண்பர் – உடன் பிறப்புகளில் ஒருவர் – அண்ணாவின் எதிரொலி என அழைத்துக் கொண்டாடப்பட்டவர் என்று நீங்கள் பீடிகை போட்டு எழுதியிருக்கிறீர்கள். அவர் யார் என்பது நாங்கள் அறியாதிருப்போமா? அவர் டி.கே. சீனிவாசன் – எங்கள் தலைவர்களுள் ஒருவர். அவரின் மகன் டி.கே.எஸ். இளங்கோவன். அவரை வடவர் ஒருவரின் எதிரொலியாக ஆகி விட்டார் என்று எழுதி இருக்கிறீர்கள். அதாவது செங்கோலை நாடாளுமன்றத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனக் கூறிய அகிலேஷ் யாதவை டி.கே.எஸ். இளங்கோவன் ஆதரித்துக் கூறியதை – நீங்கள் வடவரின் எதிரொலி என்கிறீர்கள். தமிழர்களின் பீடு பெருமை இதனால் எங்கும் போய்விடவில்லை. ஆனால் ஜனநாயகத்தின் குரலும் மக்களாட்சியின் மாண்பும் போற்றப்படவேண்டும் என்பதற்காகவே டி.கே.சீனிவாசனின் மகன் கருத்துத் தெரிவித்தார். இது தமிழர்களின் பெருமையை, பீடினை குலைப்பதாகாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். காலாவதியான ஆட்சி முறையைப் போற்றுவது செங்கோலை நாடாளுமன்றத்தில் வைப்பது ஆகும். அதோடு நீங்கள் பழமைவாதிகளை பிற்போக்குக் கொள்கையாளர்களை பின்பற்றுவதும் ஆகும் என்றே தங்களுக்குச் சொல்ல விரும்புகின்றோம்.**



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

நீங்கள் தொல்காப்பிய மரபியலை எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். மோடியைப் போலவே மயக்கப் பார்க்கிறீர்கள். நூற்பாவை சான்றாதாரமாக எடுத்து வைத்து இருக்கிறீர்கள். தி.மு.க. வினருக்குத் தொல்காப்பியமும் தெரியவில்லை, திருக்குறளும் தெரியவில்லை என்று கூறியுள்ளீர்கள். தொல்காப்பியத்தின் பழம் உரையாசிரியர்களிலிருந்து கலைஞர் உரைவரை அனைத்தையும் முறையாகப் பயின்று இருக்கின்றோம். எங்கள் பொதுக்கூட்டங்கள் இலக்கண வகுப்புகளாக, இலக்கிய வகுப்புகளாக, திராவிட ஒப்பிலக்கண ஒப்பாய்வுக் கூட்டங்களாக நடைபெற்று இருக்கின்றன. இப்படிக் கூட்டங்கள் நடத்திய ஒரு அரசியல் கட்சியை, தி.மு.க.வைப் போல உங்களால் காட்ட முடியுமா?

திருக்குறளின் பதவுரை, பொழிப்புரை, தெளிவுரை, விளக்கவுரை என பல்வேறு உரைகள் என இதுவரை 400க்கும் மேற்பட்டவை வெளி வந்து இருக்கும். அவை ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன. இவற்றில் 200 அளவுக்கான நூல்களின் கருத்துகள் நம் மண்டைச் சுரப்பு நினைவுகளில் உள்ளன. இயக்கத் தோழர்கள் – கழகத்தினர் தனிப் பாடமாக கற்றனர். கற்றும் வருகின்றனர்.

சரி, பிரச்சினைக்கு வருவோம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவர் குயில் எனும் பெயரில் ஒரு ஏட்டை நடத்தி வந்தார். அதில் 'கேட்டலும் கிளத்தலும்' எனும் ஒரு பகுதி இடம் பெற்றிருந்தது. அப்பகுதியில் ஒருவர் வினா ஒன்றை எழுப்புகிறார். வினா இதுதான் "சகரம் மொழியின் முதலில் வருமா?" தொல்காப்பியத்தின் படி வராது. நன்னூல் படி வரும்" என்றார். இதன் பொருள் என்ன?

**தொல்காப்பியர் காலத்தில் சங்கு, சங்கம், சக்கரம், சவுக்கு என்பன போன்ற சொற்கள் இல்லை. புழக்கத்தில் இல்லை. எனவே 'ச' எனத் தொடங்கும் சொற்கள் மொழி முதலில் வராது என்றார் தொல்காப்பியர். ஆனால் நன்னூலார் காலத்தில் 'ச' எனத் தொடங்கும் சொற்கள் வழக்கத்தில் இருந்தன. ஆகவே அவர் மொழி முதலில் சகர எழுத்து வரும் என்றார். இதனைத் தான் பாரதிதாசன் தமது கிளத்தலில் சொல்கிறார். காலமாறுதலால் வளர்ச்சியால் இலக்கணமும் மாறுதல் அடைகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.**

சொற்களுக்குக் கூட ஒரு காலத்தில் வழங்கப் பட்ட பொருள் பிறிதொரு காலத்தில் வழங்கப்படுவதில்லை. அப்படி இருக்கிறபோது மரபுகள் ஆணி அறைந்தாற் போல இருக்கும்; நிற்கும் என்பதை நீங்கள் எப்படிக் கூற முடியும்? சங்கு ஊதுவது திருமணத்தின் போது நிகழும் நிகழ்ச்சியாக இருந்தது. இப்போது மாற்றம் அடைந்து இருக்கிறது. பூசையின் போது இப்போதும் சிலர் மணி அடிப்பது மாதிரி சங்கையும் ஊதி இறைவனை வணங்குகிறார்கள். மிகப் பலர் அப்படிச் செய்வதில்லை. அது 'அமங்கல' வழக்கு ஆகிவிட்டது. எதையும் தொடர்ந்து இருக்கும் வழக்கம் என்று சொல்லிவிட முடியாது என்பதை ஆய்வோடு நீங்கள் பார்க்க வேண்டும்.

இறுதியாக, நன்னூல் சூத்திரம் 408-ல் என்ன சொல்கிறது?

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல காலவகை யினானே"**

இந்த நூற்பாவுக்கு – சூத்திரத்திற்குப் பொருள் என்ன? இதன்படி 'செங்கோலை' பயன்படுத்துவது அகற்றுவது வழுவாகாது தானே. ஆட்சி முறையில் ஜனநாயகம் 'குடிஅரசு' என்கிற நடைமுறை காலவகை மாற்றமாக இருப்பதால் செங்கோல் தேவையில்லை என்கிறோம். நாங்கள், மேலும் காளிதாசனின் சுலோகம் ஒன்றை 'பழமையும் புதுமையும்' எனும் கட்டுரையில் அதனைத் தமிழில் மொழிபெயர்த்த ஜே.என். நல்லசாமி பிள்ளை (சித்தாந்த தீபிகையின் (1892) ஆசிரியர்) இப்படிக் கூறுகிறார்.

"தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா
இன்று தோன்றிய நூலெனும் எவையும்
தீதாகா"

**தங்களின் பார்வைக்கு ஆய்வு பூர்வமாக அறிவு பூர்வமாக 'செங்கோல்' ஏன் இருக்கக் கூடாது – இருக்காது என்பதை எடுத்து வைத்திருக்கிறோம். ஏற்பதும் ஏற்காததும் தங்களின் அறிவுத்திட்பத்தைப் பொறுத்தது.**

இங்ஙனம்

**க.திருநாவுக்கரசு**

தி.மு.க. துணை மன்ற முன்னாள் செயலாளர்
பீ மண்ணன் பேட்டை கிளை சென்னை - 600 018.

**குறிப்பு:-** அறிஞர் அண்ணா 24.08.1947 தமது 'திராவிட நாடு' வார இதழில் எழுதிய கட்டுரையை 28.05.2023 தேதியிட்ட முரசொலி நாளேடு மறுவெளியிடு செய்து இருக்கிறது. அதை வாசிக்கவும்.



திருவாரூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினையும், காய்கறி மற்றும் பழம் விற்பனை வணிக வளாகங்களின் கட்டுமான பணிகளையும் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு செய்தார். உடன் நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், நகர்மன்றத் தலைவர் புவனப்பிரியா செந்தில், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக் குழு உறுப்பினர் இரா.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

செந்தில் பாலாஜி வழக்கை வேண்டுமென்றே

## அமலாக்கத்துறை தாமதப்படுத்துவதா?

### உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூலை 12-*

அமலாக்கத்துறை வழக்கில், தனக்கு ஜாமீன் கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உச்சநீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

பல நாட்கள் அவகாசம் அளித்தும், பதில் மனுத் தாக்கல் செய்யாமல், வேண்டும் என்றே இழுத்தடித்து வந்த அமலாக்கத்துறை மனு விசாரணைக்கு வரும் ஒரு நாளுக்கு முன்னதாக, பதில் மனுத்தாக்கல் செய்வது நீதிமன்றத்தின் கண்டனத்திற்குள்ளாகி வருகிறது.

இந்த நிலையில் செந்தில் பாலாஜியின் ஜாமின் மனு மீதான விசாரணை, உச்ச நீதிமன்ற நீதிபதிகளான அபே, அகஸ்டின் ஜார்ஜ் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, செந்தில் பாலாஜி மீதான வழக்கை வேண்டுமென்றே அமலாக்கத்துறை தாமதப்படுத்தி வருவதாக குற்றம்சாட்டினார்.

அப்போது வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என அமலாக்கத்துறை சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை ஏற்று, செந்தில் பாலாஜி ஜாமீன் மனு மீதான விசாரணையை நாளைக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற சிவகிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மாணவிகளின் வழிகாட்டுதல் குறித்து பள்ளியின் தலைமை ஆசிரியர் சுமதி தலைமையில் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் கதிர்வேல், பேரூராட்சி துணைத் தலைவர் கோபால், பள்ளி ஆசிரியர்கள் முன்னிலையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.